2013 மார்ச் 26]

65—

கல்லூரி

***14807—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் இதுவரையில் அரசு சார்ந்த ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாமல் இருந்தது. இவற்றை அறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2012–2013 ஆம் நிதியாண்டில், ஈரோடு மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையிலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரிலும், அங்கு ஒரு புதிய பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தக் கல்லூரி மொடக்குறிச்சியிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரியில் 76 ஆண்களும், 152 பெண்களும் சேர்ந்து, 228 மாணவ, மாணவியர் தற்போது படித்து வருகிறார்கள். ஆங்கிலப் பாடம், கணிதப் பாடம், Computer Science, B.Com., (C.A.), B.B.A., (C.A.) *போன்ற பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு தற்போது அந்தக் கல்லூரி நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வரலாறு காணாத அளவிற்குக் கல்விப் புரட்சியைச் செய்து வருகிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். ஈரோடு மாவட்ட மக்களுடைய 40 ஆண்டுக் காலக் கோரிக்கையினை ஏற்று, மொடக்குறிச்சி தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு 228 மாணவ, மாணவியருடன் தற்போது செயல்பட்டு வருகின்ற அந்தக் கல்லூரிக்கு நடப்பு நிதியாண்டிலேயே ஓர் இடத்திலே புதிதாக நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று தங்களின்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மொடக்குறிச்சி தொகுதியில் அந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இரண்டு இடங்களைத் தேர்வு செய்து அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒன்று, மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட வேலம்பாளையம் கிராமத்தில் 139 ஹெக்டேர் பரப்பளவில் விஸ்தீரணம் செய்யப்பட்ட தரிசு நிலம் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அதிலே 10.50 ஹெக்டேர் நிலத்தை, பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கான கட்டடம் கட்டுவதற்காக, ஆட்சேபணை இல்லாமல்,* Enter Upon Permission *கொடுத்து, ஒரு முன்மொழிவினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார். மேலும், தற்போது இந்தக் கல்லூரி சிவகிரியிலே நடைபெற்று வருகிறது. ஆகவே, சிவகிரியிலேயே இந்தக் கல்லூரி இருக்க வேண்டுமென்று சிவகிரி பேரூராட்சியைச் சேர்ந்த சந்தைப்பேட்டைக்குட்பட்ட சந்தைப் புறம்போக்கு நிலத்தில், 5.06 ஹெக்டேர் பரப்பளவிலான நிலத்தில் அங்கேயே கட்டடம் கட்ட*

2013 மார்ச் 26]

வேண்டுமென்று இரண்டு கோப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். எந்த இடத்தில் கட்டடம் கட்டினால் அங்கேயிருக்கக்கூடிய மாணவ, மாணவியருக்குப் பயன்தரும் என்பது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு கலந்து பேசி, அங்கே ஆய்வு செய்து, கூடிய விரைவில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, விரைவில் அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தற்காலிகமாக அந்தக் கல்லூரி சிவகிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரச்சலூர் உள் வட்டத்தைச் சார்ந்த 60—வேலம்பாளையம் கிராமத்திலே 25 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்து அந்தக் கல்லூரிக்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதேநேரத்தில், தற்போது சிவகிரியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டி, தொடர்ந்து அங்கேயே செயல்பட வேண்டுமென்று சிலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிவகிரி பேரூராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தைக்கு 12.40 ஏக்கர் நிலப்பரப்பு இருக்கிறது. அதிலே ஏற்கெனவே காவலர் குடியிருப்புக்கென ஒரு ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாட்டுச் சந்தை கூடிக் கொண்டிருக்கிறது; அதிக அளவிலே வாழைத் தார்கள் அங்கே கொண்டுவரப்பட்டு ஏலம் விடப்படுகின்ற சந்தையாக அது விளங்கிக் கொண்டிருக்கின்றது. 500 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற அந்தச் சந்தையை மாற்றக் கூடாது என்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10—25

அதேநேரத்தில், திடக் கழிவு மேலாண்மைக்காக அந்நிலத்திலிருந்து 3 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பேரூராட்சி ஏறத்தாழ 18 ஆயிரம் வாக்காளர்களைக்

கொண்ட பேரூராட்சியாக இருக்கிறது. எதிர்காலத்திலே அந்தப் பேரூராட்சி, நகராட்சியாக மாறக்கூடிய வாய்ப்பு இருப்பதால், அங்கு இருக்கின்ற சந்தையை மாற்றுவதற்கு பேரூராட்சியினுடைய நிருவாகம் அனுமதி கொடுக்குமா என்பது வினாவாக இருக்கின்றது. அப்படியிருக்கின்றபோது, இது காலத்தை கடத்துவதாக அமைகின்றது. நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில், வரும் ஆண்டுகளில் அந்தக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்துவதற்கு மிகப்பெரிய கஷ்டம் இருக்கும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முன்மொழிவு அனுப்பப்பட்ட 60–வேலம்பாளையம் கிராமத்திலே, உடனடியாக நடப்பு நிதியாண்டிலேயே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இரண்டு இடங்களிலும் கல்லூரி கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அதற்கான நிலத்தைத் தேர்வு செய்து கருத்துரு அனுப்பி வைத்து இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி, அந்த இடத்தில் உடனடியாக கல்லூரி கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஆட்சியருடன் நேரில் சென்று ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடம் கல்லூரி அமைப்பதற்கு ஏதுவாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று கூடிய விரைவில் அங்கே கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 2012–2013 ஆம் ஆண்டில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஆக மொத்தம் 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்குவதற்கு அனுமதி வழங்கியதோடு மட்டுமல்லாமல், கட்டடம் கட்டுவதற்கு ஒவ்வொரு கல்லூரிக்கும்

தலா 7.25 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, நிலம் அடையாளம் காணப்பட்டு, தேர்வு செய்யப்பட்டவுடனேயே கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

உயிரியல் பூங்கா

***8845—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், குருமப்பட்டி உயிரியல் பூங்காவை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், குருமப்பட்டி உயிரியல் பூங்காவை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.